# மக்களின் பணத்தை வீணடிக்கும் அரசு கடுமையாகச் சாடுகிறது பப்ரல் அமைப்பு!

கொழும்பு, ஜூன் 14

இலங்கை அரசாங்கம் முழுமையான தேர்தல் திருத்தத்தை மேற்கொள்ளத் தயாராகிறது என்றால், எல்லை நிர்ணயம் ஏன் செய்யப்பட்டது? என பப்ரல் அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது.

அரசாங்கம் தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசுகின்றது. அப்படியானால், ஜனாதிபதித் தேர்தலுக்கு வரக்கூடிய பணம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு மட்டும் எப்படிக் கிடைக்காமல் போகும்? என கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கேள்வியெழுப்பியுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காகக் கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான பிரேரணையை இலங்கை அரசாங்கம் சட்டப்பூர்வமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும். என்றாலும், தற்போதைய அரசாங்கத்தினால் தேர்தலுக்காகவோ அல்லது மக்களின் ஜனநாயகத்தை பாதுகாக்கவோ இதுவரை செலவழிக்கப்பட்ட மக்களின் பணத்தை மீள வழங்க முடியவில்லை, எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும் எனத் தெரிவித்த அவர், அரசியலமைப்பின் பிரகாரம் நடத்தப்பட வேண்டிய தேர்தலை, நடத்தக்கூடாது என்பதான தேர்தல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டுமா? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாட்டின் பொதுப் பணத்தைத் தங்களுக்குச் சாதகமாகச் செலவு செய்யலாமா? என வினா வெழுப்பிய அவர், அரசியல் அதிகாரத்திற்காகவும் ஆதாயத்திற்காகவும் மட்டுமே அரசாங்கம் செயற்படுகின்றது என்பது தெளிவாகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத்தான் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அந்த உரிமையையும் ஜனநாயகத்தையும் சிதைக்கும் மக்கள் விரோதச் செயலில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 31 புதன்கிழமை 14.06.2023 கதிர் 03



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் மின்சாரம் தாக்கி பரிதாபச் சாவு!

### மட்டக்களப்பில் துயரம்

மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

வீடு ஒன்றின் மேல்மாடிக் கூரையைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண் டிருந்த தச்சுத் தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ரொக்கி சைய்டே மற்றும் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானப்பிரகாசம் கோடீசன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த 25 வயதுடைய இளைஞர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### மொட்டுக் கட்சியை விரட்ட மக்கள் தயார்!

## நாடாளுமன்றத் தேர்தலை உடன் நடத்தக் கோருகின்றது ஜே.வி.பி.



நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மொட்டுக் கட்சியினரை விரட்டியடிக்க மக்கள் தயாராகவுள்ளனர். எனவே, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்!, என்று ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவி மீது ஆசை. மொட்டுக் கட்சியினருக்கு அமைச்சுப் பதவி மீது ஆசை. இப்படிப் பதவி ஆசை பிடித்தவர்களின் ஆட்சி தற்போது பிளவடைந்துள்ளது. மக்கள் ஆணையை இழந்த ரணில் - மொட்டு அரசு, பதவி ஆசையில்தான் ஆட்சியில் அமர்ந்தது. இது வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இவர்கள் எம்.பியாகப் பதவி வகிக்கக்கூடத் தகுதியற்றவர்கள். எனவே, புதிய மக்கள் ஆணை வேண்டும் புதிய அரசு வேண்டும். எனவே, நாடாளுமன்றத் தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும், என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



## யாழில் ஓட்டோ கவிழ்ந்து விபத்து 11 முன்பள்ளி மாணவர்கள் காயம்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் முச்சக்கரவண்டியொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் சிக்கிய முன்பள்ளிச் சிறுவர்கள் 11 பேரும் முச்சக்கரவண்டியின் சாரதியும் விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எண்ணிக்கைக்கு அதிகமாக முன்பள்ளிச் சிறுவர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த முச்சக்கரவண்டியே இன்று காலை கவிழ்ந்துள்ளது.

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நாளை முதல் ஆரம்பம்

உயர்தரப் பரீட்சையின் 2022 (2023) ஆண்டுக்கான விஞ்ஞான பாடம் உட்பட 40 பாடங்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி நாளை ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 39 நிலையங்களில் 519 மதிப்பீட்டுச் சபைகள் மூலம் விடைத்தாள் மதிப்பிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

18 நகரங்களை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஜூலை 4 ஆம் திகதி வரை குறிப்பிட்ட சில பாடசாலைகளைப் பயன்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும், ஆங்கில மொழி மூலமான விடைத்தாள்களை மதிப்பிடும் பணி ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிழக்கு சுற்றுலாத்துறை பணிப்பாளரானார் மதன்

கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளராக ஏ.பி. மதன் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

இதையடுத்து ஏ.பி. மதன், தனது கடமைகளைக் திருகோணமலை காரியாலயத்தில் இன்று பொறுப்பேற்றார். கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ள ஏ.பி. மதன், 'தமிழ் மிரர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செந்தில் பாலாஜியை நலம் விசாரித்தார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியைச் சந்தித்து, உடல் நலம் குறித்து தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நலம் விசாரித்துள்ளார்.

இந்திய மத்திய அமலாக்கத் துறையினரின் திடீர் சோதனைக்குப் பிறகு இன்று அதிகாலை தமிழக மின்சாரத்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது அவருக்கு ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஆஞ்சியோகிராம் செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். அவருடன் அமைச்சர்கள், எம்.பி.க்கள் உள்ளிட்டோரும் அமைச்சர் செந்தில்பாலாஜியைச் சந்தித்துள்ளனர்.


(இந்தச் செய்தியோடு தொடர்புடைய விரிவான செய்திகள் 4 ஆம் பக்கத்தில்)

# அரச பங்காளிகளுடன் ரணில் இன்று சந்திப்பு மஹிந்த, பசில் பங்கேற்பதாகவும் தகவல்!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், இன்று இடம்பெறவுள்ள ஆளுங்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பங்கேற்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்டோர் பங்கேற்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில் சமகால அரசியல் நிலைவரம் உட்பட, ஆளுந்தரப்பு அரசியலில் இடம்பெறும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது.

எவ்வாறாயினும், இக் கூட்டத்தைப் புறணிக்க



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னதாகத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாரதி அனுமதி அட்டைகள் தனியார் மூலம் அச்சாகும்!

சாரதி அனுமதி அட்டைகளை தனியார் மூலம் அச்சிடத் தீர்மானித்துள்ளதாக இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய தனியார் துறை மூலம் மொத்தம் 800,000 சாரதி அனுமதி அட்டைகளை அச்சிட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது, என அத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். தற்போது தமது திணைக்களத்தின் வசம் உள்ள அச்சிடும் இயந்தி ரங்களின் உற்பத்தித் திறன் போதுமானதாக இல்லை எனவும், புதிய அச்சு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 200 மில்லியன் ரூபா செலவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, சாரதி அனுமதி அட்டைகளை அச்சிடுவதில் பலமாதங்களாகத் தாமதம் ஏற்பட்டுள்ளதால் அவற்றைத் தனியார் மூலம் அச்சிடத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். தமது திணைக்களத்தின்கீழுள்ள இயந்திரத்தால், ஒரு சாரதி அனுமதி அட்டையை அச்சிடுவதற்கு 150 ரூபா செலவிடப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வயோதிபர் ஒருவர் வெட்டிக் கொலை!

கம்பஹா, வெலிவேரிய பொலிஸ் பிரிவில் வயோதிபர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 68வயதுடையகுறித்த வயோதிபரின் சடலம் வீடொன்றினுள் இரத்த வெள்ளத்தில் இருந்து இன்று மீட்கப்பட்டுள்ளது.

வெலிவேரிய பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீதிவானின் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கம்பஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# வடக்குப் பிரிவினைவாதிகளுக்காக தொல்பொருளிடங்களை பகிர முடியாது!

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு



தொல்பொருள் முக்கியத்துவமிக்க காணிகள் குறித்துப் பேச ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதுவித அருகதையும் இல்லை, என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். கண்டி, அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்களை நேற்றைய தினம் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் பதவிக்காலத்தின் எஞ்சிய காலப் பகுதியொன்றிலேயே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார். ஆகவே, இலங்கையின் தொல்பொருள் முக்கியத்துவமிக்க காணிகள் குறித்து கருத்து வெளியிட அவருக்கு எந்த அருகதையும் இல்லை.

அது குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வாய்திறந்து தனது கருத்தை முன்வைக்க வேண்டும். புத்தரின் கேச தாது வைக்கப்பட்ட இடத்தைக் கூட ஜனாதிபதி வெளிச்சவீடாக சித்தரிக்கின்றார். ஆனால், அந்த இடம் பௌத்தர்களுக்கு மிகப் புனிதமானதும் முக்கியமானதுமான இடமாகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டிலும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகப் பதவிக்குக் கொண்டு வந்து இதே போன்று தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களை அழிவுக்குள்ளாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தடுத்து நிறுத்தவே 69 இலட்சம் மக்களின் வாக்குகள் கொண்டு கோட்டாபயவைப் பதவிக்குக் கொண்டுவந்தோம்.

வடக்கின் பிரிவினைவாதிகளின் வாக்குகளுக்காக தொல்பொருள் முக்கியத்துவம் கொண்ட இடங்களை யாருக்கும் பகிர்ந்தளிக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம், என்றும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்திய- அமெரிக்க இணைவு அவசியம்!

## அமெரிக்க திறைசேரிச் செயலர் கருத்து

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம், என அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜெனெட் ஜெலென் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் நடவடிக்கைகளை தாம் தொடர்ச்சியாக அவதானித்து வருவதோடு, கடந்த ஆறு மாதங்களில் பல்வேறு விடயங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடி நிலைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார். மூன்றாம் உலக நாடுகள் எதிர்கொள்ளும் கடன் அச்சுறுத்தலானது பொருளாதாரத்திற்கும், ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்திவருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கை போன்ற நாடுகளுக்கு உரிய தருணத்தில் முழுமையான கடன் நிவாரணங்களை வழங்குவதற்கு மேலும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியிருந்தது. கோணாவில் சந்திரமுகிச் சந்தியில் ஆரம்பித்த போராட்டம், கோணாவில் விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெற்றது.

கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி கோணாவில் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் அவரது கணவனால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு, இரண்டு கண்கள் மற்றும் தலைப்பகுதியில் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார். பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் இன்றைய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கிராமத்தில் தொடர்ச்சியாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுவதாகவும், அதன் காரணமாகவே இன்றைய தினம் இந்தக் கிராமத்தில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கிராமங்களில் இடம்பெறும் குடும்ப வன்முறைகள், போதைப்பொருள் பாவனை மற்றும் இளவயது திருமணம் என்பவற்றை இல்லாதொழிக்கும் நோக்குடனுமே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குடும்ப வன்முறையோ அல்லது பெண்களுக்கு எதிரான வன்முறைகளோ இடம்பெறக் கூடாது. அவ்வாறு இடம்பெறும்



பட்சத்தில் அதனைத் தட்டிக் கேட்பதற்குப் பலமான பெண்கள் அமைப்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்த அமைப்புக்களூடாக வன்முறையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறான நபர்கள் சட்டத்திலிருந்து தப்பித்தாலும் சமூகத்திலிருந்து தப்பிக்க முடியாது. அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும், எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறுவர்கள் மீதும் பெண்கள் மீதும் அதிகளவில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு பிரதானமாக, மது, போதைப் பாவனை அதிகரித்துள்ளமையே காரணம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பேருந்துக் கட்டணங்கள் மேலும் குறைகின்றன!

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் உட்பட அனைத்து பேருந்து கட்டணங்களையும் 20 வீதத்தினால் குறைக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கொள்கையின் பிரகாரம், ஜூலை முதலாம் திகதி பேருந்துக் கட்டணத்தைக் குறைக்கும் பொறுப்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், 12 பிரிவுகள் தொடர்பான கணக்கீடுகளை ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாகவும் போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள், வாகன உதிரிப்பாகங்கள், டயர் மற்றும் பற்றரி உள்ளிட்ட 12 வகையான பொருட்களுக்கு விலைகள் அதிகரித்திருந்தமையின் காரணமாக கடந்த கொவிட் காலகட்டத்தில் பயணிகளை இருக்கைகளில் மட்டுமே ஏற்றிச் செல்லும் சட்டத்தின் கீழ் 20 வீதம் அதிகரித்த பேருந்துக் கட்டணத்துடன் கூடுதலாக ஒரு சத வீதமும் அதிகரிக்கப்பட்டது.

ஆயினும், இதுவரை 10 வீதம் கூட குறைக்கப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# இன்டர்போலின் சிவப்பு பட்டியலில் 7 இலங்கையர்களின் பெயர்கள்




சர்வதேச குற்றவியல் பொலிஸ்

அமைப்பின் (இன்டர்போல்) சமீபத்திய சிவப்புப் பட்டியலில் இலங்கையர்கள் ஏழு பேர் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஏழு பேரில், நான்கு இலங்கை-யர்கள் இலங்கையில் 'தேடப்படுபவர்கள்' என பட்டியலிடப்பட்டுள்ள-துடன், மற்ற மூன்று இலங்கையர்கள் பிற நாடுகளில் செய்த குற்றங்கள் தொடர்பாக அந்நாடுகளால் செய்யப்பட்ட கோரிக்கைகளின் பேரில் சிவப்பு அறிவிப்பில் தேடப்படுபவர்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

38 வயதான கொஸ்கொட சுஜி எனப்படும் சொய்சா ஜகமுனி சுஜிவ, 49 வயதான நடராஜா சிவராஜா, 50 வயதான முனுசாமி தர்மசீலன், 35 வயதான விக்னராசா செல்வநாதன், 52 வயதான குமாரசுவாமி நவனீதன், 61 வயதான மொஹமட் பௌமி, 41 வயதான மாணிக்கவாச-கர் விஜயராஜா ஆகியோர் இவ்வாறு தேடப்பட்டு வருவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சர்வதேச குற்றவியல் பொலிஸின் சிவப்புப் பட்டியலில் மொத்தமாக 6872 பேரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் பிரித்தானிய விபத்தில் மரணம்



கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் மூவர், பிரித்தானியாவின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மேற்கு சசெக்ஸ் பகுதியில் இரு கார்கள் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் அடங்குவர். சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் யாழ்ப்பாணம் - ஊரெழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. திருமணக் கொண்டாட்டம் ஒன்றுக்காகக் கனடாவில் இருந்து பிரித்தானியா சென்ற ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தாய், மகள் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். மகன் காயமடைந்துள்ளார்.

இவர்கள் பயணம் செய்த பிஎம்டபிள்யூ காரைச் செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் உறவினரான பெண்ணே, உயிரிழந்த மூன்றாவது நபராவார்.

கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஏ - 285 வீதியில் சிசெஸ்டர் பகுதியில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

சிசெஸ்டர் நகருக்கு அருகே விபத்து நடைபெற்ற டங்ரொன் கிராமப்புறத்தில் வீதியில் ஆட்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டுள்ளதால், கார் விபத்துத் தொடர்பான நேரடிச் சாட்சியங்கள் இல்லாததால் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் நாடியுள்ளனர்.




# யாழில் வைத்தியர்கள் - சட்டத்தரணிகளுக்கு இடையே சிநேகபூர்வ துடுப்பாட்ட - வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணி-களுக்கு இடையே சிநேகபூர்வ துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டிகள் யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது வருடமாக நாடாத்தப்படவுள்ள துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 க்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அத்தோடு, பெண் வைத்தியர்கள் மற்றும் சட்டத்-தரணிகளுக்கு இடையே முதன்முதலாக வலைப் பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் போட்டிகள் தொடர்பான விடயங்கள் அறிவிக்கப்பட்டன.

கடந்த வருடம் முதல் தடவையாக நாடாத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றிபெற்றிருந்தது.

# சீன மீன்பிடிக் கப்பல் மீனவர்களைத் தேடும் பணி கடற்படையினருக்குப் பாராட்டுக் கடிதங்கள்

ஆழ்கடலில் விபத்துக்குள்ளான சீன மீன்பிடிக் கப்பலில் இருந்த மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட கடற்படையினருக்குப் பாராட்டுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்குத் தெற்குப் பகுதியில் உள்ள அவுஸ்திரேலிய தேடுதல் மற்றும் மீட்புப் வலயத்துக்கு சொந்தமான ஆழ்கடலில் 2023 மே 16 ஆம் திகதி கவிழ்ந்த 'லூ பெங் யுவன் யு 028' என்ற சீன மீன்பிடிக் கப்பலில் இருந்த மீனவர்களை மீட்பதற்காக குறித்த பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. மிகவும் ஆபத்தான சூழ்நிலையில், தமது உயிருக்கு ஆபத்து இருந்தபோதிலும் இலங்கைக் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட இந்த சிறப்பு சுழியோடி நடவடிக்கை சர்வதேச அளவில் பாராட்டப்பட்டது.

குறித்த நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படை வீரர்களுக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா 12 ஆம் திகதி கடற்படைத் தலைமையகத்தில் பாராட்டுக் கடிதங்களை வழங்கியிருந்தார்.

இந்த மீட்புப் பணிக்காக கட-ற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பணிப்புரைக்கமைய இலங்கை கடற்படைக் கப்பல் விஜயபாகு, குறித்த கடல் பகுதிக்கு 2023 மே மாதம் 17 அனுப்பப்பட்டது. 2023 மே மாதம் 20 ஆம் திகதி கப்பலின் சுழியோடிப் பிரிவினர் மூழ்கிய மீன்பிடிக் கப்பலுக்குள் இன்னும் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் பணியாளர்களை மீட்பதற்காக சுழியோடி நடவடிக்கையைத் தொடங்கினர்.

குறித்த கடற்பகுதியின் கடுமையான தன்மைக்கு மத்தியில், கடற்படையின் சுழியோடிக் குழுவினர் மூன்று நாட்கள் மிகவும் கடினமான சுழியோடி நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். மீன்பிடிக் கப்பலின் தங்குமிடப் பகுதியிலிருந்தும் மற்ற அறைகளிலிருந்தும் சிதைந்த 14 சடலங்கள் இவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த சுழியோடி நடவடிக்கை சர்வதேச சமூகத்தின் விசேட பாராட்டைப் பெற்றதுடன், பங்களித்த லெப்டினன்ட் கமாண்டர் (சுழியோடி) இந்திக சுபசிங்க, சிரு அதிகாரி (சுழியோடி) கே.பி.ஏ.அருணஜித், சிரு அதிகாரி (சுழியோடி) ஈ.எம்.டீ.ஏ ஏகநாயக்க, சிரு அதிகாரி (சுழியோடி) டி.டி.என் ஜெயதிஸ்ஸ, கடற்படை வீரர் (சுழியோடி) எச்டி தர்ஷன, கடற்படை வீரர் (சுழியோடி) என்.எம்.சி.எல் நாராயண, கடற்படை வீரர் (சுழியோடி) ஐ.டி.எல்.எம் திசாநாயக்க, கடற்படை வீரர் (சுழியோடி) டப்.டப்.என்.சீ சந்தருவன் மற்றும் கடற்படை வீரர் (சுழியோடி) ஆர்.எஸ். குமாரகே ஆகியோரின் சிறப்பான பங்களிப்பு, தொழில்சார் திறன் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பாராட்டி அவர்களுக்கு கடற்படைத் தளபதியினால் கடந்த திங்களன்று கடற்படைத் தலைமையகத்தில் பாராட்டுக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

# பாஷையூர் புனித அந்தோனியார் வருடாந்தத் தேர் பவனி நேற்று



பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார் வருடாந்தத் தேர் பவனி நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பாஷையூரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. திருவிழாவின் திருச்சொரூப தேர்ப் பவனி நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி கைது திடீர் நெஞ்சு வலியால் வைத்தியசாலையில்



தமிழக மின்சார மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியை மத்திய அரசின் அமலாக்கத்துறையினர் கைதுசெய்து விசாரணைக்காக டெல்லி அழைத்துச் செல்ல அதிகாரிகள் முயன்றதாகக் கூறப்படுகிறது. இதன்போது அவருக்குத் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு வலியால் துடித்த நிலையில் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய மத்திய அரசின் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று காலை 7 மணி முதல் இன்று அதிகாலை 2 மணி வரை அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் அவரது வீட்டில் வைத்து விசாரணைகள் மேற்கொண்டிருந்தனர்.

சென்னையில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் 17 மணி நேரத்திற்கும் மேலாக சோதனை நடைபெற்றது. மத்திய ரிசர்வ் படை பாதுகாப்புடன் இந்த சோதனை நடைபெற்று வந்தது. அதன் பின்னர் நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு அமைச்சர் செந்தில் பாலாஜியை அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். அப்போது அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். தொடர்ந்து அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அறையில் சோதனை நிறைவடைந்துள்ளது. அமைச்சர் செந்தில் பாலாஜியின் அறையில் 10 மணி நேரத்திற்கும் மேலாக அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

இன்று பிற்பகலில் நடைபெற்ற சென்னை முதன்மை நீதிபதி விசாரணையில் வரும் 28 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# எதையும் சட்டப்படி எதிர்கொள்வோம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி




அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்குகளை சட்டப்படி சந்திப்போம், என தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, உதயநிதி ஸ்டாலின் மற்றும் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி ஆகியோர் மருத்துவமனைக்குச் அவருக்கு மருத்துவர்கள் வழங்கி வரும் சிகிச்சை குறித்து விசாரித்து உள்ளதாகவும் அவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் செந்தில் பாலாஜி நலமாக இருக்கிறார். இது பா.ஜ.கவின் பழிவாங்கும் நடவடிக்கை. இந்த உருட்டல், மிரட்டல்களுக்கு தி.மு.க. அரசு அஞ்சாது. மிசாவையே பார்த்தவர்கள் நாங்கள். அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்குகளைச் சட்டப்படி சந்திப்போம். - என்று கூறினார்.


## இந்திய - சீன எல்லையில் பாரிய நீர்மின் திட்டம்

இந்திய - சீன எல்லைக்கு அருகில் 2.6 டொலர் பில்லியன் செலவில் பாரிய நீர்மின் திட்டத்தை ஆரம்பிக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்திய மத்திய அரசு நடத்தும் என்.எச்.பி.சி லிமிடெட் அஸாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியாகச் செல்லவுள்ள இந்த சுபன்சிரி லோயர் என்ற திட்டத்திற்கான சோதனைகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கும் எனவும் அதன் முதல் கட்டப் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைது என்றால் நெஞ்சுவலி வருவதையெல்லாம் நிறைய தெலுங்குப் படங்களில் பார்த்துள்ளோம்!

## தமிழக அமைச்சர் கைதுக்கு சீமான் கருத்து



நாகர்கோவிலில் செய்தியாளர்களை இன்று காலை சந்தித்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ்நாட்டு அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறையினர் கைதுசெய்தமை தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

கைது என்றால் நெஞ்சுவலி வருவதையெல்லாம் நிறைய தெலுங்குப் படங்களில் பார்த்துள்ளோம். அப்படி என்றால் ஒவ்வொரு கைதிக்கும் நெஞ்சுவலி வர வேண்டும், அவர் கூறியுள்ளார்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களது வசதிக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். தன்னாட்சி அமைப்புகள் ஆட்சியாளர்களின் ஐந்து விரல்கள் போல்தான் செயல்படுகின்றன. இந்த அடக்குமுறை சர்வாதிகார ஆட்சி முறை மட்டுமில்லை, இது கொடுங்கோலாட்சி யாகும்.

தேர்தல் நெருங்க நெருங்க இதே போன்று பல வேலைகளைச் செய்வார்கள். செந்தில் பாலாஜி கைதென்பது எதிர்பார்த்ததுதான். அமைச்சர் செந்தில் பாலாஜியின் கைதின் பின்னணியில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட ஊழல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியெனில் இது காலம் தாழ்ந்த நடவடிக்கை, எனவும் சீமான் தெரிவித்தார்.



# நைஜீரியாவில் படகு விபத்து நூற்றுக்கணக்கானோர் பலி!

நைஜீரியாவின் வடக்கு நைஜர் மாகாணத்தில் இடம்பெற்ற படகு விபத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு நைஜர் மாகாணத்தில் உள்ள எக்போடி கிராமத்தில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு, திரும்பிச் செல்லும் போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்தத் திருமண நிகழ்ச்சியில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து பலர் பங்கேற்றுள்ளனர்.

திருமணம் முடிந்து 300க்கும் மேற்பட்டோர் ஒரே படகில் திரும்பிக் கொண்டிருந்துள்ளனர். அந்தப் படகில் பயணித்தவர்கள் தங்களது மோட்டர் சைக்கிள்களையும் அதே படகில் எடுத்துச் சென்றுள்ளனர். அதிக எடை காரணமாக படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட 103 பேர் பரிதாபமாகப் பலியானதோடு தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 100 க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர் என வும் அவர்களைத் தேடும் பணி தொடர்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடி அரசை எதிர்ப்பவர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கை காங்கிரஸ் கடும் கண்டனம்

தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான அமலாக்கத்துறையின் கைது நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் மீதான கைது நடவடிக்கைக்கு எதிராக பலரும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். காங்கிரஸ் கட்சி சார்பாக அக்கட்சியின் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நள்ளிரவில் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன். இது அரசியல் துன்புறுத்தலும், பிரதமர் மோடி அரசை எதிர்ப்பவர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கையுமாகும். இந்த மோசமான நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் அஞ்சாது, எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நள்ளிரவு நடவடிக்கைகளை தமிழ்நாடு காங்கிரஸ் கண்டிக்கிறது. அரசியல் நோக்கத்திற்காக கைது செய்துள்ளனர். அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம், என தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியுள்ளார்.

# முதலாவது பயிற்சிப் போட்டியில் நெதர்லாந்தை வீழ்த்தியது இலங்கை

ஐ.சி.சி உலகக் கிண்ணத்தின் தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணியானது நேற்றைய தினம் நெதர்லாந்து அணியுடன் பயிற்சிப் போட்டி ஒன்றில் விளையாடியுள்ளது.

இப்பயிற்சிப் போட்டியில், 215 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய இலங்கை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 45.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

நெதர்லாந்து அணி சார்பாக சாகிப் சுல்பிகர் 54 ஓட்டங்களையும் டெஜா நிடமானுரு 41 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றிருந்தனர். பந்துவீச்சில் இலங்கையணியின் கசுன் ராஜித 3 விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தார்.

அடுத்து, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 37.1 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்த நிலையில் இலக்கையடைந்து 3 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக அணி தலைவர் தசுன் சானக 67 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வழிவகுத்திருந்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2023இல் வெளியிடப்பெற்றது.